# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 83/மா/2024**
**நாள்: 30 .01.2025**

திருமதி K. ராகவி
சென்னை – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
தாம்பரம் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சென்னை–600 005, சேப்பாக்கம், பெரிய தெரு, எண்.170/2 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி K. ராகவி த/பெ கண்ணன் என்பவரின் 05.01.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.01.2024–ல் பெறப்பட்டு 83/மா/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை–600 005, சேப்பாக்கம், பெரிய தெரு, எண்.170/2 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி K. ராகவி த/பெ கண்ணன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"சென்னை மாடம்பாக்கம் பிளாட் எண்.185, பாலாஜி நகர் 8வது குறுக்கு தெருவில் வசித்து வரும் ராஜாராம் என்பவரின் மகன் வினோத்ராஜ் என்பவருக்கும் எனக்கும் கடந்த 10.03.2023ஆம் தேதியில் பெரியோர்களின் சம்மதத்துடன் கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள உத்தண்டி ஸ்ரீமதி ரிசார்ட் என்ற இடத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப் பின்னர் நானும், என் கணவரும் மேற்படி மாடம்பாக்கம் முகவரியில் வசித்து வந்தோம். என் கணவர் வினோத்ராஜ் கடந்த 16.08.2023 அன்று அவருக்கு ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக வீட்டிலேயே இறந்து விட்டார். அதற்கான இறப்பு சான்றிதழ் மாடம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரால் கடந்த 25.09.2023ஆம் தேதியில் வழங்கப்பட்டுள்ளது. அதன் பதிவு எண்.D-2023:33–17353–000170 ஆகும். மேற்படி இறப்பு சான்றிதழில் என் கணவர் திருமணமாகாதவர் என உண்மைக்கு புறம்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இறப்பு சான்றிதழை என் கணவரின் வீட்டார் என் சம்மதம் இல்லாமல் திருமணமான உண்மைகளை மறைத்து என் கணவரின் இறப்பு பயன்களை பெறும் பொருட்டு மோசடியாக உண்மைக்கு மாறான தகவல்களை தெரிவித்து மாடம்பாக்கம் பேரூராட்சியிடமிருந்து பெற்றுள்ளார்கள். இதனால் நான் மிகுந்த மனவேதனைக்கும், மனவுளைச்சலுக்கும் ஆளாகியுள்ளேன். இறந்து விட்ட என் கணவரின் சட்டப்பூர்வமான வாரிசு நான் ஆவேன். இது குறித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியும், மாடம்பாக்கம் பேரூராட்சியால் தவறான முறையில் வழங்கப்பட்ட என்

கணவரின் இறப்பு சான்றிதழை ரத்து செய்து என்னிடம் விசாரணை மேற்கொண்டு சரியான விவரங்கள் அடங்கிய இறப்பு சான்றிதழை வழங்க வேண்டி தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு அஞ்சலில் கடந்த 07.11.2023 அன்று மனு ஒன்றினை நான் அனுப்பி இருந்தேன். அதனை பெற்றுக் கொண்ட தாம்பரம் மாநகராட்சி ஆணையர் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் கடமை தவறியுள்ளார். தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் செயலால் நான் மிகுந்த மனவுளைச்சலுக்கும், மன வேதனைக்கும் ஆளாகியுள்ளேன். மாடம்பாக்கம் பேரூராட்சி தற்போது தாம்பரம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு விட்டதால் நான் என்னுடைய மனுவினை தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பினேன்.

எனவே, தாங்கள் தயவு செய்து மேற்படி நிகழ்வுகளை கருத்தில் கொண்டு மாடம்பாக்கம் பேரூராட்சி வழங்கிய தவறான மேற்படி என் கணவரின் இறப்பு சான்றிதழை ரத்து செய்து என்னிடம் விசாரணை மேற்கொண்டு சரியான இறப்பு சான்றிதழை வழங்க தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு தகுந்த உத்தரவினை பிறப்பிக்குமாறும், மேலும் என்னுடைய மேற்படி மனுவின் மீது நடவடிக்கை எடுக்காமல் எனக்கு மனவுளைச்சல் ஏற்படுத்திய தாம்பரம் மாநகராட்சி ஆணையர் மற்றும் தொடர்புடைய தாம்பரம் மாநகராட்சி ஊழியர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் தங்களை நான் பணிவன்புடன் வேண்டுகிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 12.01.2024 நாளிட்ட கடிதம் மற்றும் 13.08.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. ஆனால், தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடமிருந்து எவ்வித பதிலறிக்கையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு கிடைக்கப் பெறவில்லை.

4. இந்நிலையில், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 23.01.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.01.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன,

5. மனுதாரர் திருமதி K. ராகவி என்பவர் 23.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

சென்னை மாடம்பாக்கம் பிளாட் எண்.185, பாலாஜி நகர் 8வது குறுக்கு தெருவில் வசித்து வரும் திரு ராஜாராம் என்பவரின் மகன் திரு வினோத்ராஜ் என்பவருக்கும் எனக்கும் 10.03.2023 ஆம் தேதியில் பெரியோர் ஆசீர்வாதத்துடன் கிழக்கு கடற்கரையில் உள்ள உத்தண்டி ஸ்ரீமதி ரிசார்ட் என்ற இடத்தில் திருமணம் நடைபெற்றது.

மேற்படி மாடம்பாக்கம் முகவரியில் நானும் என் கணவரும் வசித்து வந்தோம். 16.08.2023 அன்று என் கணவருக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டு வீட்டிலேயே இறந்து விட்டார். அதற்கான இறப்பு சான்றிதழ் மாடம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரால் 25.09.2023 ஆம் தேதியில் வழங்கப்பட்டது. பதிவு எண்.D.2023:33-17353-000170. மேற்படி இறப்பு சான்றிதழில் என் கணவர் திருமணமாகாதவர் என உண்மைக்கு புறம்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்த இறப்பு சான்றிதழை என் கணவரின் வீட்டார் என் சம்மதம் இல்லாமல் திருமணமான உண்மைகளை மறைத்து என் கணவரின் இறப்பு பயன்களை பெறும் பொருட்டு மோசடியாக உண்மைக்கு மாறான தகவல்களை தெரிவித்து மாடம்பாக்கம் பேரூராட்சியிடமிருந்து பெற்றுள்ளார்கள். இதனால் நான் மிகுந்த மனவேதனைஅடைந்துள்ளேன்.

இறந்த என் கணவரின் சட்டப்பூர்வமான வாரிசு நான் என்பதை குறித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி மாடம்பாக்கம் பேரூராட்சியால் தவறான முறையில் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழை ரத்து செய்து என்னிடம் விசாரணை மேற்கொண்டு சரியான விவரங்கள் அடங்கிய இறப்பு சான்றிதழை வழங்க வேண்டி தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு 07.11.2023 அஞ்சலில் மனு ஒன்றினை அனுப்பி இருந்தேன்.

மேலும் மாடம்பாக்கம் பேரூராட்சி தற்போது தாம்பரம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுவிட்டதால் நான் என்னுடைய மனுவினை தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பினேன். இது நாள் வரை தாம்பரம் மாநகராட்சி ஆணையர் எந்தவித நடவடிக்கை எடுக்காமல் கடமை தவறியுள்ளார். ஆகையால் நான் மிகுந்த மன உளைச்சலும், மனவேதனையும் அடைந்துள்ளேன். அய்யா அவர்கள் மேற்கண்ட நிகழ்வுகளை கருத்தில் கொண்டு மாடம்பாக்கம் பேரூராட்சியால் வழங்கிய என் கணவரின் இறப்பு சான்றிதழை ரத்து செய்தும், என்னிடம் விசாரணை மேற்கொண்டு சரியான இறப்பு சான்றிதழை வழங்க தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு தகுந்த உத்தரவினை பிறப்பிக்குமாறும் தன் அலட்சியத்தால் ஒரு வருடம் மேல் என்னை மன உளைச்சலுக்கு ஆளாக்கிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் என் திருமண நிகழ்ச்சிக்கான புகைபட நகல்களை ஆதாரமாக இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன்'' என தெரிவித்துள்ளார்.

6. தாம்பரம் மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு. ஆ. சாமுவேல் 23.01.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''மனுதாரரின் முறையீட்டின்படி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5க்குட்பட்ட வார்டு எண்.68ல் பிளாட் எண்.185, பாலாஜி நகர் 8வது தெருவில் வசித்து வரும் திரு.இராஜாராம் என்பவரின் மகன் திரு.ஆர்.வினோத்ராஜ் 16.08.2023 அன்று மாரடைப்பின் காரணமாக மேற்குறிப்பிட்ட வீட்டிலேயே இறந்துவிட்டார் என்று மருத்துவர் சான்றின்படி அவர் இறப்பை தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5–ல் பதிவெண் 17383–00170–ன்படி 22.09.2023–ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த இறப்புப் பதிவானது திரு.G.இராஜாராம் (ஆர்.வினோத்ராஜ் அவர்களின் தந்தை) அவர்கள் அளித்துள்ள இறப்பு அறிக்கை படிவம் எண்.2ன்படி இறந்த திரு.ஆர்.வினோத்ராஜ் என்பவர் திருமணம் ஆகாதவர் என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் கள விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் இறந்த திரு.ஆர்.வினோத்ராஜ் த/பெ.திரு.இராஜாராம் என்பவருக்கும் முறையீட்டு மனுதாரர் கே.ராகவி த/பெ. கண்ணன் என்பவருக்கும் 10.03.2023 ஆம் தேதியில் திருமணம் நடைபெற்றது என்பதும் திரு.ஆர்.வினோத்ராஜ் இறப்பின் போது இறுதி சடங்குகளை மனைவி என்ற முறையில் மேற்கூறிய விலாசத்தில் உடனிருந்து செய்யப்பட்டது என்றும் தெரிய வருகிறது. மேலும் இது தொடர்பாக அருகிலுள்ள பிளாட் 193 பாலாஜி நகர் 8வது தெருவில் வசித்து வரும் திரு.கந்தசாமி த/பெ. மாரிமுத்து என்பவரிடமும் இறந்த திரு.வினோத்ராஜ் அவர்களின் தாயார் நவநீதம் என்பவரிடமும் மேலும் அப்பகுதியில் வசித்து வரும் சமூக சேவகர் திரு.செந்தில் குமார் என்பவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள தகவல் அனைத்தும் உண்மையென தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம் 1969 மற்றும் பிறப்பு இறப்பு பதிவு (திருத்தம்) சட்டம் 2000–ன்படி பிரிவு 15–ல் உள்ளவாறு மோசடியாக அல்லது முறையற்ற முறையில் செய்யப்பட்டுள்ள பிழையினை திருத்தம் மேற்கொள்ளலாம் எனவும் மேலும் மனுதாரர் மாடம்பாக்கம் கிராம நிர்வாக அதிகாரியிடம் தனது கோரிக்கைக்கு ஆதாரமாக இருப்பிட சான்றிதழோ அல்லது திருமணமானவர் என்று சான்றுடனோ உரிய ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களுடன் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5 அலுவலகத்தில் மனு அளிக்கும் பட்சத்தில் மனுதாரரின் கோரிக்கை குறித்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இம்முறைமன்ற நடுவர் முன்பு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், புகைப்படங்கள் மற்றும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை மாடம்பாக்கம் பிளாட் எண்.185, பாலாஜி நகர் 8வது குறுக்கு தெருவில் வசித்து வரும் திரு ராஜாராம் என்பவரின் மகன் திரு வினோத்ராஜ் என்பவருக்கும் K.ராகவி அவர்களுக்கும் 10.03.2023 ஆம் தேதியில் கிழக்கு கடற்கரையில் உள்ள உத்தண்டி ஸ்ரீமதி ரிசார்ட் என்ற இடத்தில் திருமணம் நடைபெற்றுள்ளது. மேற்படி மாடம்பாக்கம் முகவரியில் மனுதாரரும் அவரது கணவரும் வசித்து வந்துள்ளனர். 16.08.2023 அன்று மனுதாரரின் கணவருக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டு வீட்டிலேயே இறந்து விட்டார். அதற்கான இறப்பு சான்றிதழ் மாடம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரால் 25.09.2023 ஆம் தேதியில் வழங்கப்பட்டுள்ளது. அதன் பதிவு எண்.D.2023:33-17353-000170. அச்சான்றிதழில் திருமதி. K.ராகவி அவர்களின் கணவர் திருமணமாகாதவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. திருமதி. K.ராகவி அவர்களின் கணவரின் இறப்பு பயன்களை பெறும் பொருட்டு உண்மைக்கு மாறான தகவல்களை தெரிவித்து மாடம்பாக்கம் பேரூராட்சியிடமிருந்து இறப்பு சான்றிதழை கணவர் வீட்டார் பெற்றுள்ளார்கள். எனவே, மேற்கண்ட கணவரின் இறப்பு சான்றிதழை இரத்து செய்து, சரியான இறப்பு சான்றிதழை வழங்க தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு தகுந்த உத்தரவினை பிறப்பிக்குமாறும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் மனுதாரர் கோரியுள்ளார்.

மனுதாரர் தெரிவித்துள்ள தகவல் அனைத்தும் உண்மையென தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5–ன் சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது. பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம் 1969 மற்றும் பிறப்பு இறப்பு பதிவு (திருத்தம்) சட்டம் 2000–ன்படி பிரிவு 15–ல் உள்ளவாறு மோசடியாக அல்லது முறையற்ற முறையில் செய்யப்பட்டுள்ள பிழையினை திருத்தம் மேற்கொள்ளலாம் எனவும் மேலும் மனுதாரர் மாடம்பாக்கம் கிராம நிர்வாக அதிகாரியிடம் தனது கோரிக்கைக்கு ஆதாரமாக இருப்பிட சான்றிதழோ அல்லது திருமணமானவர் என்று சான்றுடனோ உரிய ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களுடன் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5 அலுவலகத்தில் மனு அளிக்கும் பட்சத்தில் மனுதாரரின் கோரிக்கை குறித்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளரின் வாக்குமுலத்திலிருந்து மேலும் அறிய முடிகிறது.

மனுதாரர் மாடம்பாக்கம் கிராம நிர்வாக அதிகாரியிடம் தனது கோரிக்கைக்கு ஆதாரமாக இருப்பிட சான்றிதழோ அல்லது திருமணமானவர் என்று சான்றுடனோ உரிய ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களுடன் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5 அலுவலகத்தில் மனு

அளிக்கும் பட்சத்தில் மனுதாரரின் கோரிக்கை குறித்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுகாதார ஆய்வாளர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி முறையீட்டு மனுதாரர் திருமதி.K.ராகவி அவர்கள் மாடம்பாக்கம் கிராம நிர்வாக அதிகாரியிடம் அவரது கோரிக்கைக்கு ஆதாரமாக இருப்பிட சான்றிதழோ அல்லது திருமணமானவர் என்ற சான்றுடனோ உரிய ஆவணங்கள் மற்றும் இதர ஆதாரங்களுடன் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5 அலுவலகத்தில் மனு அளிக்கும் பட்சத்தில் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்து மனுதாரர் குறிப்பிட்டுள்ள பிழையினை உரிய விசாரணைக்கு பிறகு தக்க திருத்தம் செய்து உரிய இறப்பு சான்றிதழை திருமதி. K.ராகவி அவர்களுக்கு வழங்குமாறு தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையாளருக்கு அறிவுறுத்திட தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஜனவரி 30-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
1) திருமதி K. ராகவி, த/பெ கண்ணன்,
170/2, பெரிய தெரு,
சேப்பாக்கம், சென்னை–600 005.
2) உதவி ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
மண்டலம் 5 அலுவலகம்,
ஏரிக்கரைத் தெரு,
கிழக்கு தாம்பரம், சென்னை–600 055.
3) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி, தாம்பரம்.
4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.
5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

31/1/25

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

31.1.2025